**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 144/2025**

திருமதி. லீலா ஜெயந்தி (P.W. –1) **06.02.2026.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் வீட்டில் இருந்து வருகிறேன். முதல் விசாரணை வாக்குமூலம், தாவா பொருண்மைகள் சரியாக உள்ளது என்றால் ஆமாம். தவறாக இருந்தால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரி. தாவாச்சொத்தை எப்போது கிரையம் பெற்றேன் என்றால் 21.10.2022 ஆம் தேதி கிரையம் பெற்றேன். கிரையம் பெறும் போது என்ன மூல ஆவணங்கள் பார்த்தேன் என்றால் நத்தம் பட்டாவை பார்த்தேன். தாவாச்சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் மாறாள், ராமசாமி ஆகியோரிடம் நேரடியாகவும், ரங்கசாமி, தெய்வாணை அவர்கள் இறந்த பிறகு அவர்களின் வாரிசுகளிடம் இருந்து கிரையம் பெற்றேன். யாரிடம் நேரடியாக கிரையம் பெற்றீர்கள் என்றால் மாறாள், ராமசாமி, ரங்கசாமி, தெய்வாணை ஆகியோரிடம் கிரைய ஆவணம் பெற்றுள்ளேன்.

தாவாச்சொத்து தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதி என்றால் ஆமாம். தாவாச்சொத்து தமிழ்நாடு அரசால் வீடு இல்லாத ஏழை எளிய மக்களுக்கு கொடுக்கப்பட்ட இலவச பட்டா சொத்து என்றால் தவறு. என் கணவர் என்ன வேலை பார்க்கிறார் என்றால் நில வியாபாரம் செய்கிறார். என் கணவர் பெயர் என்ன என்றால் மகேந்திரகுமார். அவர் அரசியல் கட்சியில் உள்ளார் என்றால் ஆமாம். குடும்பத்துடன் எங்கு வசிக்கீறிர்கள் என்றால் செட்டிபாளையத்தில் 2012 ல் இருந்து வசித்து வருகிறேன். தாவாச்சொத்திற்கும் நான் வசிக்கும்

வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 3 கி.மீ. தாவாச்சொத்தில் உள்ள 5ல் 4 பாகத்தை விற்பதாக எப்போது யார் மூலம் தெரிந்து கொண்டீர்கள் என்றால் நான்கு நபர்கள் விற்பதாக சொன்னார்கள் எப்போது என்று தெரியாது.

தாவாச்சொத்தை எனக்கு விற்பனை செய்தவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் என்றால் ஆமாம். தாவாச்சொத்து அரசால் இலவச நிபந்தனை பட்டாவாக கருப்பன் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. தாவாச்சொத்திற்குரிய பட்டாவில் என்ன நிபந்தனைகள் உள்ளது என்றால் தெரியாது. அதில் தமிழ்நாடு அரசிடமிருந்து ஆட்சேபனை இல்லை என்று சான்றிதழ் வருவாய்த்துறையினரிடம் பெற்ற பிறகு தான் கிரையம் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. தடையின்மை சான்று வாங்கவில்லை என்றால் ஆமாம். தாவாச்சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு நேரில் பார்த்துள்ளீர்களா என்றால் இல்லை. தாவாச்சொத்தில் என்ன கட்டிடம் உள்ளது, என்ன அளவுகள் என்றால் தெரியாது. தாவாச்சொத்தில் மின் இணைப்பு உள்ளதா என்றால் தெரியாது. யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. தாவாச்சொத்தின் மின் இணைப்பு 3ம் பிரதிவாதியின் தந்தை பெயரில் உள்ளது என்றால் தெரியாது.

தாவாச்சொத்தின் செக்குபந்தி விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.11 சொத்து விவரம் தாவாச்சொத்திற்குரிய பட்டா சொத்து விவரத்துடன் சரியாக உள்ளதா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 கருப்பன் பெயரில் தவறாக வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. நத்தம் க.ச.எண். 392/5 சொத்து எங்கு உள்ளது என்றால் தெரியாது. தாவா வழக்குரை சங்கதிகளும் முதல் விசாரணை சங்கதிகளும் தவறாகவும் மாறுபட்டும் உள்ளது என்றால் தவறு. அதனால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தவறு. தாவா வழக்குரை ஆவண விவரங்களில் ஆவணங்களின் தேதி அடித்து திருத்தி எழுதப்பட்டுள்ளது

என்றால் சரி. முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஆவணங்களின் தேதி தவறாக உள்ளது என்றால் சரி. அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தவறு. என் கணவர் சொத்தை கிரையம் பெற்றார் விவரங்கள் அவருக்குத்தான் தெரியும். 3ம் பிரதிவாதியின் தகப்பனார் எந்த தேதியில் இறந்தார் என்றால் தெரியாது. தாவாச்சொத்தை கிரையம் பெறும் போது கிரைய ஆவணத்தில் வாரிசு சான்றிதழ் இணைத்துள்ளீர்களா என்றால் இல்லை.

கருப்பன் இறந்து 43 வருடங்கள் கழித்துத்தான் வா.சா.ஆ.4 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. தாவாச்சொத்தை தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த பிரதிவாதிகளிடமிருந்து ஏமாற்றி பெற வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. தாவாச்சொத்தை 3ம் பிரதிவாதி கிரையம் தரவில்லை என்பதால் மற்ற பாகதாரர்களிடமிருந்து தாவாச்சொத்தை கிரையத்தொகை செலுத்தாமல் கிரையம் பெற்றுவிட்டேன் என்றால் தவறு. என்னிடம் பாகதாரர்கள் பணம் பெற்றுக்கொண்டு விற்றுவிட்டார்கள். போலீசார் தூண்டுதலின் பேரில் மற்ற பாகதாரர்களிடம் கிரையம் பெற்றுவிட்டேன் என்றால் தவறு.

வா.சா.ஆ.1 என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி பெற்றுள்ளேன் என்றால் தவறு. தாவாச்சொத்தில் 3ம் பிரதிவாதிதான் ஆரம்பத்தில் இருந்து குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றால் அப்படி யாரும் அங்கு வசிக்கவில்லை. தாவாச்சொத்தில் உள்ள வீட்டில் 3ம் பிரதிவாதி முறையான வரி செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை 3ம் பிரதிவாதியின் குடும்பத்தாரின் பிரச்சினையை பயன்படுத்தி கிரையம் பெற்றுள்ளேன் என்றால் தவறு. தாவாச்சொத்தை பொறுத்து பட்டா எப்போது மாற்றம் செய்தேன் என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஐ தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 பட்டா எனக்கு கிரையம்

செய்து கொடுத்த நபர்களுக்கே உரிமை இல்லை என்றால் தவறு. என்னுடைய கிரைய ஆவணத்தில் ஆர்.டி.ஆர் அசைன்மெண்ட் பட்டா எண் சொல்லவில்லை என்றால் சரி. தாவாவில் எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

**ஒம்/– கே. ஆர். கண்ணன்.,**
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.